# மராட்டியர் அகழ்வைப்பகம்

## (கையேடு)

பதிப்பாசிரியர்

முனைவர் **தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,** இ.ஆ.ப.,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

ஆசிரியர்கள்

**ச. செல்வராஜ்**

**ச. பரணன்**

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு

2010

# அச்சிட்டோர் விவரம்

முதற் பதிப்பு : 2010

வெளியீடு எண். : 215

நூலின் பெயர் : மராட்டியர் அகழ்வைப்பகம் (கையேடு)

© தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

பதிப்பாசிரியர் : முனைவர் **தி.ஸ்ரீ. ஸ்ரீதர்**, இ.ஆ.ப.,

ஆசிரியர்கள் : ச. செல்வராஜ்,
ச. பரணன்

மொழி : தமிழ்

எழுத்தின் அளவு : 12 Pt.

தாள் அளவு : 80 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ

படிகள் : 500

பக்கங்கள் : 44

விலை : ரூ. 60/-

அச்சிட்டோர் : தென்சென்னை மாவட்ட அச்சக
தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கம்,
5/2, கோயா அருணகிரி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை–14.

முனைவர் **தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008.

# பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் கீழ் இயங்கிவரும் பதினான்கு அகழ்வைப்பகங்களில் மராட்டியர் அகழ்வைப்பகமும் ஒன்றாகும். சோழநாட்டின் தலைநகரான தஞ்சையை விசயநகர நாயக்க மன்னர்களுக்குப் பிறகு வந்த மராட்டியர்கள் தங்களுக்கென ஒரு தனிப் பாணியை வகுத்து கட்டிடக்கலை, ஓவியக்கலை ஆகியவற்றில் சிறந்தோங்கி இருந்தனர். இம்மன்னர்களின் ஆவணங்கள் 'மோடி ஆவணங்கள்' என்றே வழங்கப்பட்டன. இவர்களின் வரலாறு மற்றும் கலைப் படைப்புகளை அனைவரும் அறியும் வண்ணம் ஓரிடத்தில் தொகுத்து தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தஞ்சாவூரில் மராட்டியர் அகழ்வைப்பகத்தை உருவாக்கியுள்ளது.

இவ்வகழ்வைப்பகத்தில் மாராட்டியர் கால ஓவியங்கள், கட்டடக்கலை மற்றும் மன்னர்களின் பட்டியல், முத்திரைகள், செப்புத்திருமேனிகள், கற்சிற்பங்கள், மைல்கற்கள் ஆகியவை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்நூல் பகுதி II திட்டம் (2009-2010) ஆண்டு நூல் வெளியீட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து வெளியிடப்படுகின்றது. இந்நூலினை வெளியிட நிதி ஒதுக்கீடு செய்த தமிழக அரசுக்கு எனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இத்துறையில் இதுவரை ஒன்பது அகழ்வைப்பகக் கையேடுகள் வெளிவந்துள்ளன.

பத்தாவதாக மராட்டியர் அகழ்வைப்பகக் கையேட்டினை வெளியிடுவதில் மிகவும் பெருமையடைகிறேன்.

இந்நூலினை எழுதிய ச. செல்வராஜ், காப்பாட்சியர் (பொறுப்பு) மராட்டியர் அகழ்வைப்பகம் மற்றும் ச. பரணன், காப்பாட்சியர், கங்கைகொண்டசோழபுரம் ஆகியோருக்கும், இந்நூல் வெளிவர துணைபுரிந்த அகழாய்வாளர் முனைவர் சீ. வசந்தி அவர்களுக்கும் இந்நூலை வடிவமைத்த அச்சுப்பிரிவினர் அனைவருக்கும் எனது பாராட்டுகள்.

நாள் : 07-01-2010

சென்னை-600 008

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**

# முன்னுரை

சோழ நாட்டின் தலைநகராம் தஞ்சை, "இஞ்சி சூழ் தஞ்சை" என்றழைக்கப்பட்ட இவ்வூர் பல்லாற்றானும் சிறப்புக்கள் பல பெற்றுத் திகழ்ந்தது. உலக மக்களின் கவனத்தை ஈர்க்க வல்ல தஞ்சை பெருவுடையார் கோயிலும் அதன் கலையழகும் அனைவரும் அறிந்ததே. சோழப் பேரரசிற்குப் பின்னர் விசயநகர, நாயக்க மன்னர்களும் தஞ்சையையும் அங்குள்ள கலைப் படைப்புக்களையும் பேணிப் போற்றிப் பெருமை சேர்த்தனர். பின்னர் மராட்டியர்கள் தங்கள் வசம் தஞ்சையை கொண்டு வந்து ஆட்சிபுரிந்தனர்.

மராட்டிய மன்னர்கள் தங்களுக்கு என தனிப் பாணியை வகுத்து கட்டிடக்கலை, ஓவியக்கலைகளை சிறப்பித்தனர். அத்தகு மராட்டிய மன்னர்களின் வரலாறு, அவர்கள் படைத்த கலைப் படைப்புக்கள் என அனைத்தையும் தொகுத்து தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தஞ்சாவூரில் மராட்டியர் அகழ்வைப்பகம் ஒன்றை அமைத்தது.

இவ்வகழ்வைப்பகத்தில் அவர்கள் காலத்தில் பயன்படுத்திய பொருட்கள், செப்புத் திருமேனிகள், எடைகற்கள், பல்லக்குகள், அளவைகள், பீங்கான் உருவ பொம்மைகள், செப்புப் பட்டயங்கள், மருந்து அரைக்கும் கல்வங்கம் மற்றும் இறைவனின் திருமேனி களும், இரண்டாம் சரபோஜியின் அமர்ந்த நிலை செப்புப் படிமமும் கண்டு மகிழத்தக்கவை.

இவை காலத்தால் அழியாத கலைப்படைப்புக்கள். இவர்களது மராட்டியர் கால ஓவிய திறனுக்கு சான்றாக மன்னர்களின் ஓவியப் படங்கள் சிறப்பாக அமைந்துள்ளது.

இந்நூல் வரலாற்று ஆய்வாளர்களுக்கும், மாணவர் களுக்கும், பார்வையிட வரும் அன்பர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக திகழும் என நம்புகின்றோம். மராட்டியர்களைப் பற்றிய வரலாற்றுத் தெளிவும், அவர்களது வாழ்க்கை முறையும், அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் ஒருங்கிணைத்துப் பார்க்கவும் இந்நூல் பயனுள்ளதாக அமையும் என்றும் கருதுகின்றோம்.

இந்நூல் எழுத எங்களுக்கு உரிய நேரத்தில் தகுந்த அறிவுரைகளை வழங்கியும், அகழ்வைப்பகக் கையேடுகள் விரைந்து வெளிவருதல் வேண்டும் என்பதிலும் எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வழிநடத்தும் எங்கள் துறைத் தலைவரான முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப., முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர், தொல்லியல் துறை, சென்னை அவர்களுக்கு எங்களது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் இந்நூல் வெளிவர ஆலோசனையும் உதவியும் வழங்கிய இத்துறை பதிவு அலுவலர் முனைவர். சீ. வசந்தி அவர்கட்கும், இந்நூலை D.T.P. செய்து, அட்டைப்படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர், திருமதி. ச. சரஸ்வதி அவர்கட்கும், அச்சுப்பிழை திருத்திய முதுநிலை முதலாள், திரு. மா. ஆ. சங்கர் அவர்கட்கும் மற்றும் அச்சுப்பிரிவில் உள்ள அனைவருக்கும், எங்களது அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

அன்புடன்

ச. செல்வராஜ்

ச. பரணன்

# பொருளடக்கம்

பதிப்புரை

முன்னுரை

1. வரலாற்றில் தஞ்சை . . . 1
2. மராட்டியர் கால ஓவியங்கள் . . . 4
3. மராட்டியர் கால கட்டடக்கலை . . . 5
4. மராட்டிய மன்னர்கள் பட்டியல் . . . 11
5. முத்திரைகள் . . . 14
6. மைல் கற்கள் . . . 16
7. செப்புத் திருமேனிகள் . . . 20
8. கற் சிற்பங்கள் . . . 23
9. முடிவுரை . . . 26

# வரலாற்றில் தஞ்சை

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் தஞ்சாவூர் கலைகளின் இருப்பிடமாகவும் திகழ்ந்து வருகின்றது. வளம் பல கொழிக்கும் தஞ்சைப் பகுதியை கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு வரை முத்தரையர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். இவர்களுக்குப் பின் சோழர்கள் கி.பி. 846 முதல் 1279 வரையிலும் அவர்களைத் தொடர்ந்து பாண்டியர்களும், விசயநகர மன்னர்களும் கி.பி 13, 14-ஆம் நூற்றாண்டில் ஆட்சியை செலுத்தினர். இவர்களை அடுத்து தஞ்சை நாயக்கர்கள் கி.பி. 1541 - 1674 வரையிலும், இறுதியாக தஞ்சையை மராட்டிய மன்னர்கள் கி.பி. 1674 முதல் 1855 வரையிலும் ஆட்சி புரிந்து தஞ்சைக்குப் புகழ் சேர்த்துள்ளனர். கட்டடக் கலைக்கும், கலை இலக்கிய வரலாற்றிற்கும் இந்த அரச மரபினர் செய்துள்ள தொண்டு இன்றளவும் வியக்கச் செய்கின்றது.

## தஞ்சை நாயக்கர்கள்

தஞ்சாவூரில் விசயநகர ஆட்சியின் இறுதிப் பகுதியில் இரகுநாத நாயக்கர் தஞ்சையில் தனது ஆட்சியை நிறுவி ஆட்சி புரிந்தான். இவனுக்குப் பின்னர் இவரது மகன் இரகுநாத நாயக்கரின் மகன் விசயராகவ நாயக்கன் ஆட்சிப் பொறுப்பு ஏற்றான். சமயப்பற்றும், சடங்குகளிலும் அதிக நம்பிக்கை கொண்டவனாக திகழ்ந்தான். இவனது வீரத்தை மற்றவர்கள் குறை கண்டனர். கோல்கொண்டா படைகள் தஞ்சாவூர் எல்லையை எட்டியபோது இவன் அச்சம் கொண்டதாகத் தெரிவிக்கின்றனர். சொக்கநாதன் தஞ்சாவூரை முற்றுகையிட்டான். விசயராகவர் போரில் இறங்கி வீர மரணம் அடைந்து தனது வீரத்தை நிரூபித்தான். தஞ்சையிலிருந்து நாயக்க இளவரசன் செங்கமலதாசு என்பவன் விசயராகவனை அடுத்து தானே அரியணை ஏறத் திட்டமிட்டான். இவன் பீஜப்பூர் சுல்தானையும் அணுகி அவனது ஆதரவை நாடினான். செங்கமலதாசுக்குத் துணைபுரியும் பொருட்டு வெங்கோஜியையும் (பீஜப்பூர் சுல்தான் மாற்றாந்தாயின் மகன்) சுல்தான் பணித்தான். வெங்கோஜியும் படையைக் கொண்டு சென்று

செங்கமலதாசுக்கு அரசைக் கைப்பற்றித் தந்துள்ளான். ஆனால் இறுதியில் 1675-இல் தஞ்சாவூரை தானே கைப்பற்றி மராட்டிய வம்சத்தை உருவாக்கி இதன் தலைமைப் பொறுப்பை ஏற்று தஞ்சை மராட்டியர் வம்சத்தைத் தோற்றுவிக்கின்றான்.

## மராட்டியர் காலத்தில் தஞ்சாவூர்

கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலக்கட்டத்தில் தென் தமிழகத்தில் சிறப்புடன் ஆட்சிபுரிந்து வந்த விசயநகரப் பேரரசு, தன் வலிமையை இழந்தது. அதுசமயம் தஞ்சாவூர் பகுதியில் மராட்டியர்கள் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தத் தலைப்பட்டனர். மராட்டியத்தில் உள்ள சிவாஜியின் உடன்பிறவா சகோதரரான வெங்கோஜி, தஞ்சைக்கு சிவாஜியால் அனுப்பப்படுகின்றார். இவர் விசயநகர மன்னனான விசயராகவருடைய மகனுக்கு உதவி புரியவும், தளர்ந்த நிலையிலுள்ள விசயநகரப் பேரரசைக் காக்கவும் வந்து சேருகின்றார். ஆனால் சூழ்நிலை காரணமாகவும், மக்களின் ஆதரவு காரணமாகவும், வெங்கோஜியே தஞ்சையைத் தன் வசமாக்கி மராட்டிய வம்சத்தைத் தோற்றுவித்து ஆள வேண்டிய நிலை ஏற்படுகின்றது. மராட்டிய மாமன்னர் சிவாஜியும், தென்னிந்தியாவில் இவர்களது ஆட்சி மலரட்டும் என வாழ்த்தி வழிவிடுகின்றார். இவருக்குப் பின்னர் ஏகோஜி, ஷகாஜி, சரபோஜி, துக்கோஜி என ஒருவர் பின் ஒருவராக ஆட்சிக் கட்டிலில் ஏறித் தஞ்சையை முழுமையான மராட்டியர் சாம்ராஜ்யமாக அமைத்து பல அரிய பணிகளை மேற்கொள்கின்றனர்.

முகலாயர்களின் படையெடுப்பால் சிறிது ஆட்டம் கண்ட மராட்டியர்கள் சற்று சமாளித்து கிழக்கிந்தியக் கம்பெனியாருடன் நட்புறவு கொண்டு தங்கள் ஆட்சியை நடத்தினர். கிழக்கிந்திய கம்பெனியாரும், மராட்டியர்கள் துணைக் கொண்டு தஞ்சைப் பகுதியில் தம் ஆதிக்கத்தைச் செலுத்தினர். ஒருவர் துணையுடன் ஒருவர் வாழ்ந்ததைப் போல மராட்டியரும், ஆங்கிலேயரும் நட்புள்ளத்துடன் தங்களைப் பரிமாற்றிக் கொண்டு நாட்டை ஆண்டு வந்தனர்.

கால மாற்றத்தால் கிழக்கிந்தியக் கம்பெனியர்கள் மராட்டிய வம்சத்தில் வாரிசு உரிமை ஏற்பட்ட காலகட்டத்தில் துளசாஜி மகன் சரபோஜியின் ஒப்பற்ற திறமையையும் அறிவுக்கூர்மையையும் கண்டு தஞ்சையை அவர் வசம் ஒப்புவித்து ஆட்சிபுரிய வைத்தனர்.

இவரது புத்திக்கூர்மையையும், சமயோஜித அறிவையும் பார்த்த சுவார்ட்ஸ் டேனிஷ்மிஸின் இவருடைய தனித் திறமைகளை வெளிக்கொணர முயற்சித்து வெற்றியும் கண்டார். இவரது திறமையால் சரபோஜியின் கலை, அறிவியல், மொழித்திறன், இலக்கியப்பற்று இவை அனைத்தும் வெளிப்பட்டது.

மராட்டியர்களது ஆட்சியின் காலகட்டத்தில் தென்னிந்தியாவில் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் ஒரு தனிச்சிறப்பை அடைந்து பல்லாற்றானும் மக்களை ஈர்த்தன. கலை, பண்பாட்டிற்கு கும்பகோணமும், தஞ்சாவூரும் இரண்டு பெரிய மையங்களாக நின்று செயல்பட்டது. வட இந்தியாவில் காணப்பட்ட ஓவியங்களை தென்னிந்தியாவிற்கு கொண்டு வந்து அறிமுகப்படுத்தி அற்புதமான வளர்ச்சியையும் அடையச் செய்தனர். இந்த கலை மற்றும் பண்பாடு விசயநகர காலத்துப் பாணியுடன் இணைந்து மேலும் மெருகூட்டியது. பின்னர் விசயநகர பாணி, வட இந்திய ஓவியம் இவற்றுடன் தங்களது கருத்துக்களையும் கலந்து புதியதோர் பாணியை தஞ்சை மராட்டியர்கள் தென்பகுதியில் பரப்பி அதனை ஒரு தனித்தன்மை வாய்ந்ததாக மாற்றி வளரச் செய்தனர். இவை கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் மிகவும் பிரபலமடைந்துக் காணப்பட்டது.

தந்தத்தாலும், மரத்தாலும் வனையப்பட்ட தென்பகுதி சிற்பங்களும், கலைப்பொருட்களும் பிற கலைப் பொருட்களுக்கு முன் உதாரணமாக அமைந்தது.

இங்கு வரையப்பட்ட ஓவியங்கள் தூய கலப்பில்லாத வண்ணங்களைக் கொண்டு வரையப்பட்டவை. இவர்கள் அதிகமாக பயன்படுத்திய வண்ணங்கள் சிவப்பு, மஞ்சள், நீலநிறம், கறுப்பு மற்றும் வெள்ளை போன்றவை ஆகும்.

★★★★

# மராட்டியர் கால ஓவியங்கள்

மராட்டியர் கால ஓவியங்கள் பல தனிச்சிறப்பையும் தன்னிகரில்லாத இடத்தையும் பெற அதன் தனித்தன்மையே காரணமாகும். இவர்கள் வரையும் ஓவியங்களில் காணப்படும் நகை அலங்காரம், ஆடை அணிகலன்கள், திரைச்சீலைகள் மற்றும் கட்டிடக் கலையின் சிறப்பை எடுத்துக்காட்டும் காட்சிகளும், ஆங்காங்கே உயர்ந்த கம்பீரமான தூண்களும், மாடங்களும் போன்ற ஓவியங்கள் காண்போரை நேரில் கொண்டு நிறுத்தும் அளவிற்கு வரையப்பட்டுள்ள தன்மை போற்றற்குரியதாக திகழ்ந்து வருகின்றது.

ஆடை அணிகலன்களும், மன்னர்களின் மகுடங்களும், தோரணங்களும் இவர்களின் ஓவியத் திறமைக்கு எடுத்துக்காட்டு என்றால் அந்த ஆடைகளிலும், சூட்டிய மகுடங்களிலும் தேவைக்கு ஏற்ப அமைந்த தங்க இழைகளோடும் அமைப்பும், அவற்றில் பதிந்த விலையுயர்ந்த கற்களும், கண்ணாடிகளும் தஞ்சாவூர் மராட்டியர் ஓவியம் என்று அனைத்துலகமும் ஒருமுகமாக பார்த்தவுடன் உணரும் தனிச்சிறப்பின் கலைப்படைப்பாகவே அன்றும், இன்றும் என்றும் தொடர்ந்து திகழ்ந்து வருகின்றது. தஞ்சை மராட்டியர் ஓவியங்களுக்கே ஒரு தனி வரவேற்பு உலக மக்களிடம் காணப்படுவதைக் கொண்டு அதன் சிறப்பை உணரலாம்.

மராட்டியர் காலகட்டத்திலும் மற்றும் மராட்டியர் தர்பார் மண்டபத்திலும் வரையப்பட்டுள்ள மன்னர் உருவங்களும், அவர்களது ஆடை அணிகலன்களும், கூரை ஓவியங்களும் அதனுள்ளே காட்டப்பட்ட மரவேலைப்பாடு போன்ற அமைப்பும் எண்ணி எண்ணி வியக்கத்தக்கவை ஆகும். இங்கு வரையப்பட்டுள்ள ஓவியங்களில் காணப்படும் மன்னர்களும், பிற உருவங்களும், அழகிய பெண்களும் வீரர்களின் உடல் தோற்றமும், வலிமையையும் காணும்பொழுது எவ்வளவு செழிப்புடன் வாழ்ந்துள்ளனர் என்பதை ஊகித்துணர முடிகின்றது.

★★★★

# மராட்டியர் கால கட்டடக்கலை

## தர்பார் மண்டபம்

தர்பார் மண்டபம், அரண்மனை வளாகத்தில் நாயக்கர் களால் கட்டப்பட்டு அவர்களது ஆட்சிக்குப் பின்னர் மராட்டியர்களால் பராமரிக்கப்பட்டு சில பகுதிகளை புணரமைப்பு செய்து இதனை புதிய பொலிவுடன் தர்பார் மண்டபம் என அழைத்தனர். நாயக்க, மராட்டிய மன்னர்கள் நீதி வழங்கிய இடம் இது. குற்றவாளிகளை விசாரித்து அதற்குரிய தண்டனையையும் வழங்கிய இடமாகும். இந்த மண்டப அமைப்பே ஓர் அலாதியானது.

சரஸ்வதி மகால் நூல் நிலையத்தின் கிழக்குப் பகுதியில் நுழைவு வாயில் ஒன்று உள்ளது. இதன் வழியாக வரும்பொழுது மேற்கு பார்த்த நிலையில் ஒரு திறந்தவெளி முற்றத்துடன் மரத்தூண்கள் கொண்ட முன்மண்டப அமைப்புடன் கூடிய அகன்ற கீழ்தாழ்வாரம் காணப்படும். இதன் மையப் பகுதியில் சில படிகள் (மரத்தால் ஆனது) மீது ஏறிச் சென்றால் தர்பார் மண்டபத்தை அடையலாம். இந்த மண்டபத்தில் எண்பட்டை வடிவத்தில் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் காணப்படும் வளைவுகள், அதன் தாங்கிகள் அதன்மேல் காணப்படும் சுதை உருவங்களாக விடையூர்தியில் சிவபெருமான், கருடன் மீது திருமால், இந்திரன், இந்திராணி போன்ற பல வண்ணம் பூசப்பட்ட சுதை உருவங்களைக் கண்டு மகிழும் வண்ணம் அமைத்துள்ளனர். இதன் மேற்புறச் சுவரில் மல்யுத்த வீரர்கள் யுத்தம் புரிவது போல ஓவியங்கள் வரையப்பட்டிருந்தது. அவை தற்போது சிதைந்துபோய்விட்டது. இருப்பினும், விதானத்தில் வரையப்பட்ட ஓவியங்கள், பறவைகள், தேவகன்னிகள் போன்றவை கண்ணுக்கு விருந்தாக அமைகின்றது.

தர்பார் மண்டபத்தின் மையப் பகுதியில் மராட்டிய மன்னர் சிவாஜி ஓவியமும், அருகில் அமைச்சர் தளவாய் ஆகியோரின் ஓவியங்களும் தீட்டப்பட்டுள்ளது. இந்த ஓவியங்களுக்கு முன் பகுதியில் ஒரு மேடை அமைக்கப்பட்டு மரத்தால் தோரணங்கள் காட்டப்பட்டுள்ளது. இத்தோரணங்கள் முழுவதும் கண்ணாடிகள்

கொண்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில்தான் மன்னர் அமர்ந்து நீதி வழங்குவது வழக்கம். இதன் அருகில் நீதி வழங்கியதும் உடன் சபையைக் கலைத்து தான் விடைபெற்றுச் செல்ல வழிவகையையும் அமைத்துள்ளதை இன்றும் காணலாம். அரசரின் முன்னால் மண்டப மையப் பகுதியில் குற்றவாளிகளை நிறுத்தி விசாரித்து நீதி வழங்கியதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

தர்பார் மண்டபத்தின் வடக்குப் பகுதியில் மாடியில் மர சன்னல்கள் அமைக்கப்பட்டு அங்கு அரச மகளிர் மற்றும் உயர் குடும்பத்தினர் அமர்ந்து நீதி பரிபாலனத்தைக் காணுவதற்கு ஏற்ப அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

இந்த தர்பார் மண்டபத்தின் எதிரில் அமைந்த திறந்தவெளி முற்றத்தில் மல்யுத்தம், கிடாய்ச் சண்டை போன்ற தமிழர்களின் வீர விளையாட்டுக்களை நிகழ்த்தியுள்ளனர். மேலும் மராட்டியர்கள் வீர விளையாட்டிலும், மல்யுத்தத்திலும் ஆர்வமிக்கவர்களாக இருந்துள்ளனர்.

இம்மண்டபத்தில் மேற்குப்புறச் சுவரிலும், வடக்குப்புறச் சுவரிலும் மராட்டியர் கால ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளது. இவற்றை தொல்லியல் துறையின் மூலம் வெளிக்கொணரும்போது மராட்டியர் கால ஓவியங்களுக்குக் கீழே விசயநகர காலத்து ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. எனவே விசயநகர காலத்திலேயே இந்த மண்டபம் செயல்பாட்டில் இருந்து சிறப்புப் பெற்றிருத்தல் வேண்டும். பின்னர் மராட்டியர்களும் அதன் வழியாக பின்பற்றி இம்மண்டபத்தை மேலும் மெருகேற்றி வண்ண ஓவியங்களால் அலங்கரித்து சிறப்பு பெறச் செய்துள்ளனர் என்பதை இதன்மூலம் அறியமுடிகின்றது.

இத்தகு செழிப்போடு வாழ்ந்த மக்கள் ஆங்கிலேயரின் துணைக் கொண்டுதான் ஆட்சியைத் தொடர வேண்டியிருந்தது. அவர்களோ சூரியன் தோன்றி மறையும் நாடுகள் அனைத்தும் தங்களுடைய நாடாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். இத்தகு ஆங்கிலேயரை எதிர்த்து பிரான்சு நாட்டைச் சார்ந்த மாவீரன் நெப்போலியன் போர்க்கொடி உயர்த்தினான்.

ஆங்கிலேயர்களுக்கும், நெப்போலியனுக்கும் இடையே பிரான்சு நாட்டின் வடக்கிலுள்ள வாட்டர்லூ என்ற இடத்தில் கி.பி. 1814-இல் பெரும் போர் நடைபெற்றது. இப்போர் பிரான்சு நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகிறது என்று உலக நாடுகள் எண்ணின. ஆங்கிலேயர்களது படைபலத்தைக் காட்டிலும் பிரான்சு நாட்டின் படைபலம் அதிகமாக இருந்ததால் நெப்போலியன் வெற்றி பெறும் சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் ரஷ்ய நாட்டின் படைகள் ஆங்கிலேயர்களுக்கு உதவிக்கு வந்ததால் பிரான்சு நாடு தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று. மாவீரன் நெப்போலியன் போரில் தோற்கடிக்கப்பட்டார். ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றனர்.

வரலாற்றில் மிகவும் சிறப்பானதொரு இடத்தைப் பெற்ற இந்த வெற்றி ஆங்கிலேயர்களுக்கு மட்டுமின்றி அவர்களுடன் நட்பு கொண்ட நாடுகள் அனைத்தும் இந்த பெரும் வெற்றியை மகிழ்வுடன் கொண்டாடின. அதுசமயம் தமிழ்நாட்டில் தஞ்சையை ஆட்சி புரிந்த மராட்டிய மன்னன் இரண்டாம் சரபோஜியும் இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தான். அதன் நினைவாக ஓர் அரிய கலைப்படைப்பை படைத்தான். அத்தகைய கலைப்படைப்பு ஒரு வெற்றித் தூணாகவும், நினைவுச்சின்னமாகவும் அமைவது போல எடுப்பித்தான் இரண்டாம் சரபோஜி. அந்த நினைவுச்சின்னம்தான் மனோரா. இது கி.பி. 1814-இல் கட்டப்பட்டுள்ளது. இதைப்போலவே ஆயுத கோபுரம், மணிக்கோபுரம், சதர்மாடி (சார்ஜா மாடி) போன்ற அரண்மனை வளாகத்தில் அமைந்துள்ள பிற மராட்டியர் கலைப் பாணியில் மாற்றி அமைக்கப்பட்ட கட்டிடப் பகுதிகள் ஆகும்.

மராட்டிய மன்னன் சிவாஜியின் காலத்தில் வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி. காவிரி ஆகிய ஆறுகள் தஞ்சையிலிருந்து திருவையாறு செல்லும் நெடுஞ்சாலையில் பாலங்களைக் கட்டியுள்ளான். இவை இரண்டு நுழைவுப் பகுதியிலும் அமைக்கப்பட்ட மனோரா கட்டடக்கலை அமைப்பு போன்று சிறிய அளவில் கட்டப்பட்டுள்ளதே இவை மராட்டியர்கள் காலத்துப் பாணி என்பதை உணர்த்துகின்றன.

தஞ்சை பெரிய கோயில், சிவகங்கை குளம், சிவகங்கை பூங்கா, சுவாட்ஸ் பாதிரியார் கிருத்துவ. கோயில் இவை உள்ளிட்ட

பகுதிகளைக் கொண்ட கோட்டையினை சின்னக் கோட்டை என்பர். இது தஞ்சை நாயக்க மன்னன் செவ்வப்ப நாயக்கன் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

தஞ்சை அரண்மனை வளாகம் அடங்கிய பகுதி பெரிய கோட்டை என அழைக்கப்படுகிறது. இது சுமார் 530 ஏக்கர் பரப்பினை உள்ளடக்கியது. சுற்றிலும் 15 அடி உயர மதில் சுவர் கொண்டது. பெரிய கோட்டையினை தஞ்சை விசயநகர நாயக்க மன்னன் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

தஞ்சை நாயக்க மன்னர்களுக்குப் பின் மராட்டிய மன்னர்கள் சுமார் 180 ஆண்டுகள் தஞ்சையை 13 மராட்டிய மன்னர்கள் ஆட்சி செலுத்தியுள்ளனர். இரண்டாம் சகாசி என்ற மராட்டிய மன்னன் மராட்டிய தர்பார் கூடத்தைக் கட்டுவித்தான். முன்னரே கட்டப்பட்ட நாயக்கர் கட்டிடப் பகுதிகளுடன் மேற்படி தர்பார் கூடத்தையும் இணைத்து அமைத்தான். தஞ்சை அரண்மனையில் அமைந்துள்ள சரஸ்வதி மகால் நூல் நிலையத்தை இரண்டாம் சரபோஜி விரிவுபடுத்தினான். மற்றும் கீழ ராஜவீதியில் உள்ள ஐந்து மாடி கட்டிடமான சார்ஜா மாடியினையும் கட்டியவன் இவனே. இவ்வாறு மராட்டிய மன்னர்கள் தங்களுக்கு என ஒரு கலைப் பாணியை அமைத்துக்கொண்டு ஆங்காங்கே பல அரிய சமயப் பணிகளையும், திருக்கோயில்களை அமைத்தலும், புதுப்பித்தல் பணியையும் மேற்கொண்டுள்ளனர்.

## ஆயுதக் கோபுரம்

தஞ்சைக்கு வருகை புரிபவர்களின் மனதைக் கவரும் தஞ்சைப் பெரிய கோயிலின் விமானத்திற்கு இணையாகத் திகழ்வது அரண்மனை வளாகத்தில் உள்ள ஆயுதக் கோபுரமாகும். 190 அடி உயரத்தில் 8 அடுக்குகளைக் கொண்டு எடுப்பாக காட்சியளிக்கின்றது. இத்தாலிய கட்டிடப் பாணியுடன் இந்தியக் கட்டிடப் பாணியை இணைத்து திட்டமிடாத அணி வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்டிருப்பது இது என்று பர்குஸ்ஸன் (Fergussan) என்னும் வெளிநாட்டு கட்டிடக்கலை வல்லுநர் கூறியுள்ளார். இதன் உச்சியை அடைய உட்பகுதியில் சிறிய அளவில் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கிருந்து விரைவாக ஆயுதங்களை எடுத்துச்செல்ல இயலாது.

தஞ்சை மராட்டியர் காலத்தில் எழுப்பப்பட்ட இக்கோபுரம் கி.பி.1855 வரை மராட்டிய அரசர்கள், எதிரிப் படைகள் யாதேனும் வருகின்றதா என்பதைக் கண்காணிக்கும் கோபுரமாகவும் ஆயுதங்கள் சேகரித்து வைக்குமிடமாகவும் பயன்படுத்தப்பட்டது. இதனில் பலவிதமான போர்க்கலன்கள் இருந்தன. ஐரோப்பிய நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட ஆயுதங்களும் இவற்றில் அடங்கும்.

இங்கு வட்டமாக மேல் தளத்தில் தொங்கவிடப்பட்ட நிலையில் ஆயுதங்களை வைப்பது போல வடிவமைத்துள்ளனர். இவ்வரண்மனை 1855-இல் ஆங்கிலேயர் வசம் சென்றதும் இவ்வாயுதங்கள் அனைத்தும் திருச்சிராப்பள்ளிக்கு 1863-இல் கொண்டு செல்லப்பட்டு அங்கு அதிகாரிகளால் "பழைய ஆயுதங்கள் - புதிய போர்முறைக்குத் தேவையற்றவை" என சான்றிதழ் வழங்கப்பட்டு சில மட்டும் அருங்காட்சியகங்களுக்கு அளிக்கப்பட்டு, எஞ்சிய பெரும்பகுதி உடைத்தும், உருக்கியும் விற்கப்பட்டன என்று குறிப்புக்கள் உள்ளன.

## மணிக்கோபுரம்

இக்கோபுரம் 'மணிமாடம்' என்றும் 'தொள்ளை காது மண்டபம்' என்றும் அழைக்கப்படுகிறது. சீவல் என்ற ஆய்வாளர் இக்கோபுரத்தின் மேல் புதுமையான காலம் காட்டும் கடிகாரம் ஒன்று இருந்தது என்றும் அதில் ஒரு குரங்கு பொம்மை மணி அடிப்பது போன்று இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

இன்று ஏழு தளங்களுடன் காட்சி அளிக்கும் இக்கோபுரம் மேலும் சில தளங்கள் உடையதாக இருந்ததற்கான தடயங்கள் உள்ளன. இக்கோபுரத்தின் அடித்தளத்தில் நான்கு மீட்டர் உயரத்திற்கு சேர்ந்து இருந்த மண்ணும் குப்பையும் அகற்றப் பட்டபோது, அதன்கீழ் பீங்கான்களாலான கலைப்பொருட்கள் மற்றும் அடித்தளத்தின் கீழே சிறு கோயிலும், சிறிய நீராழி மண்டபம் போன்ற அமைப்பும், சில நாயக்கர் கால அரசர், அரசியரின் சுதையால் ஆன தலை உருவங்களும் கிடைக்கப் பெற்று மராட்டியர் அகழ்வைப்பகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அழகிய உருண்டையான தூண்களும் அதன் ஏழு மாடியின் வெளிப்புற வடிவமைப்பும் காண்போரைக் கவருவனவாகும்.

## சார்ஜா மாடி

சார்ஜா மாடி அடித்தளம் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டது. இதில் அவர்கள் காலத்து ஓவியங்கள் தீட்டப்பட்டும், புராண கதைகளின் சுதை உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மராட்டியர் மன்னரான இரண்டாம் சரபோஜி கி.பி. 1824-இல் ஏழு மாடி கட்டிடத்தினைக் கட்டியதற்கான கல்வெட்டுக் குறிப்புகள் சார்ஜா மாடியில் உள்ளது.

சார்ஜா மாடியின் முதல் தளத்தில் மராட்டியர் அகழ்வைப்பகம் இயங்கி வருகிறது. தற்பொழுது ஐந்து மாடிகளே உள்ளது. இங்கு காணப்படும் தூண்களும், அதில் காணப்படும் சிற்ப வேலைப்பாடுகளும் அழகுடன் அமைந்துள்ளது. மராட்டியர் கலைப்பாணியில் விதானங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது தளத்தில் தூண்கள் நிறைந்த மண்டபமாக அழகுற வடிவமைக்கப்பட்டுள்ளது. மூன்றாவது தளத்தில் பெரியதோர் நீண்ட விரிந்த அறை உள்ளது. இதில் தங்களது இல்லத்து நிகழ்ச்சிகளை நடத்தியிருத்தல் வேண்டும். நான்காவது மாடியில் திறந்தவெளி அமைப்பும் ஐந்தாவது மாடி பாதுகாவலர் மற்றும் அரசரும் அரசியாரும் மாலைப்பொழுதில் இத்தளத்தில் அமர்ந்து தஞ்சை நகர் முழுவதும் பார்வையிட்டு. அதன் செழிப்பையும் தன் நாட்டு வளத்தையும் கண்டு ரசிக்க அமைத்த முற்ற மாடம் ஆகும். இவை கண்ணாடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து தஞ்சை நகரையும் சுற்றியுள்ள கிராமங்களையும் காணலாம். தஞ்சை பெரிய கோயிலின் விமானத்தையும் இங்கிருந்தே கண்டு தரிசிக்கலாம். தஞ்சையிலேயே மிகவும் உயரமான பழமையான கட்டிடம் இதுவே ஆகும். மன்னர்கள் வாழ்ந்த அரண்மனையின் பல பகுதிகள் சிதைந்து போனாலும் அரண்மனை என்ற அமைப்பில் அதன் உட்பகுதியில் காணப்படும் பல மாடங்களும், மண்டபங்களும், தோரண வாயில்களும், உயர்ந்த தூண்களும் அன்றைய நினைவை ஏற்படுத்துகின்ற வண்ணம் இன்றும் அமைந்துள்ளது.

மராட்டிய மன்னர் சிவாஜி ஓவியத்திற்கு மேற்பகுதியில் தியாகராஜர் சுவாமி உருவம் காட்டப்பட்டுள்ளது. அவரது ஆசியால் ஆட்சி நடத்துவது போல இது வரையப்பட்டுள்ளது.

★★★★

# மராட்டிய மன்னர்கள் பட்டியல்

## தஞ்சையில் ஆட்சி புரிந்த நாயக்கர் கால மன்னர்கள்

| | | |
|---|---|---|
| 1. | சேவப்ப நாயக்கர் | கி.பி. 1541 - 1580 |
| 2. | அச்சுதப்ப நாயக்கர் | கி.பி. 1580 - 1600 |
| 3. | இரகுநாத நாயக்கர் | கி.பி. 1600 - 1634 |
| 4. | விஜயராகவ நாயக்கர் | கி.பி. 1633 - 1674 |

## தஞ்சையில் ஆட்சிபுரிந்த மராட்டியர் கால மன்னர்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஏகோஜி - I | கி.பி. 1674 - 1684 |
| 2. | சகஜி | கி.பி. 1684 - 1711 |
| 3. | சரபோஜி - I | கி.பி. 1711 - 1729 |
| 4. | துக்கோஜி | கி.பி. 1729 - 1735 |
| 5. | ஏகோஜி - II | கி.பி. 1735 - 1737 |
| 6. | சுசலன் பாய் | கி.பி. 1737 - 1738 |
| 7. | காட்டு ராஜா | கி.பி. 1738 |
| 8. | சையாஜி | கி.பி. 1738 |
| 9. | பிரதாப்சிங் | கி.பி. 1739 - 1763 |
| 10. | துளசாஜி | கி.பி. 1763 - 1787 |
| 11. | அமர்சிங் | கி.பி. 1787 - 1798 |
| 12. | சரபோஜி - II | கி.பி. 1798 - 1832 |
| 13. | சிவாஜி | கி.பி. 1832 - 1855 |

மராட்டிய மன்னர்கள் தஞ்சையில் சுமார் 180 ஆண்டுகள், 13 அரசர்களால் ஆட்சி புரிந்திருக்கின்றனர். மராட்டிய வரலாறு குறித்து கி.பி. 1928-இல் கே.ஆர். சுப்பிரமணியம் என்பவர் "தஞ்சை மராட்டிய அரசர்கள்" (The Maratha Rajas of Tanjore) என்ற ஆங்கில நூலை வெளியிட்டார். பின்னர் கி.பி. 1944-இல் சி..கே. சீனிவாசன், "கர்நாடகப் பகுதியில் மராட்டியர் ஆட்சி" என்ற ஆங்கில நூலை எழுதியுள்ளார். அதன் பின்னர் மற்றும் பலர் மராட்டியர் வரலாறு குறித்து எழுதியுள்ளனர்.

## செப்புப் பட்டயங்கள்

இரண்டு செப்புப் பட்டயங்கள் காட்சி பேழையில் வைக்கப்பட்டுள்ளன. ஒன்று தெலுங்கிலும் மற்றொன்று வடமொழியிலும் (நந்தி நாகரி) எழுதப்பட்டுள்ளது.

## தெலுங்கு செப்பேடு

இத்தெலுங்கு செப்பேடு 29 செ.மீ நீளம், 17½ செ.மீ. அகலம் கொண்டு கி.பி. 1719-இல் எழுதப்பட்டுள்ளது. முன்புறம் 24 வரிகளும் பின்புறம் 3 வரிகளும் முடிவில் இரண்டாம் சொக்கநாத நாயக்கர் என்று தெலுங்கில் பெரிய எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது.

## வடமொழி செப்பேடு

இவ்வடமொழி செப்பேடு 3 ஏடுகளைக் கொண்டுள்ளது. செப்பேட்டின் நுனி பகுதியில் துவாரம் அமைத்து வளையத்தில் கோர்க்கப்பட்டுள்ளது. இச்செப்பேட்டின் நீளம் 28½ செ.மீ. அகலம் 19 செ.மீ. கொண்டு கி.பி. 18-ஆம் நூற்றாண்டாகும். இச்செப்பேட்டின் முடிவில் "விருபாக்ஷ" என்று தெலுங்கிலும் எழுதப்பட்டுள்ளது.

### காசுகள்

இவ்வகழ்வைப்பகத்தில் சோழர், தஞ்சை நாயக்கர், லிங்கம நாயக்கர் (மதுரை), கங்கர், மைசூர் உடையார், கிழக்கிந்தியக் கம்பெனி, டேனிஷ் போன்ற காசுகள் உள்ளன. இக்காசுகள் தஞ்சையின் ஆட்சிப் பகுதியில் வழக்கத்திலிருந்தது.

### உண்டியல்கள்

சிறிதும், பெரிதுமான உண்டியல்கள் காட்சி பெட்டியில் வைக்கப்பட்டுள்ளன. உண்டியல்கள் மூடியுடன் உள்ளன.

## செம்பாலான பழம்பொருட்கள்

### விளக்கு

கஜலெட்சுமி உருவம் பொறித்த விளக்குகள் மராட்டியர் கால கலைப்பாணியுடன் உள்ளன.

### சாம்பிராணித் தூபம்

மேல்பகுதி அகன்றும், கீழ்ப்பகுதி குவிந்தும் காணப்படுகிறது. மேல் பகுதியை எட்டு அரவம் தலை போன்ற உருவங்கள்

தாங்கிய நிலையில் உள்ளது. இத்தூபத்தில் "திருவாட்பாறு ஆதிகெசவளு. . . . .சாம்பிறாணி கலசம்" என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளது. காலம் கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மராட்டியர் கலைப் பாணியாகும். இது 30 செ.மீ உயரமும், 25 செ.மீ அகலமும் உள்ளது.

## எண்ணெய் கிண்ணம்

இதில் "காமாட்சியம்மன் துணை" என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளது.

## பால்நாழி

படியின் நடுப்பக்கத்தில் பிடித்துக் கொள்வதற்கு வசதியாக வளையம் அமைக்கப்பட்டுள்ளது.

## சொம்பு (சிறியது)

இதில் திருமாலின் பத்து அவதாரங்களான மச்சம் (மீன்), கூர்மம் (ஆமை), வராகம் (பன்றி), நரசிம்மம் (பாதிசிம்மம், பாதி மனிதன்), வாமனர், பரசுராமர், இரகுராமர், கிருஷ்ணர், புத்தர், கல்கி போன்ற உருவங்கள் காணப்படுகின்றன. இது மராட்டியர் கலைப்பாணியாகும்.

## சொம்பு (பெரியது)

இதில் சுற்றிலும் மனித உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் இவ்வகழ்வைப்பகத்தில் சிலம்புகள், சுண்ணாம்புக் கரண்டி, வெண்கலப் பானை, குடுவை, பேளி முதலிய மராட்டியர் பயன்படுத்திய செப்புப் பொருட்கள் காட்சிக்காக வைக்கப் பட்டுள்ளன.

★★★★

# முத்திரைகள்

## மராட்டியர் காலத்து முத்திரை

இம் முத்திரையில் "ஸ்ரீராம் பிரதாப்" என்று நாகரி எழுத்துகளால் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. மராட்டிய மன்னர்களில் ஒருவரான ஸ்ரீராம்பிரதாப் என்ற பெயரில் முத்திரை வெளியிட்டு அலுவல்களுக்குப் பயன்படுத்தியுள்ளார்கள் என்று அறியமுடிகிறது.

## டச்சு முத்திரை

ஹாலந்து நாட்டவர், "டச்சு கிழக்கிந்திய கம்பெனி" என்ற பெயரில் தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினத்தில் கோட்டை அமைத்து வியாபாரம் நடத்தினர். இவர்கள் கம்பெனியின் சுருக்குப் பெயராக V.O.C. (Vereenigde oost Indische Compagnie) என்ற பெயர் பொறித்த முத்திரை வெளியிட்டுள்ளார்கள். இதுபோலவே V.O.C. என்ற பெயரில் காசுகள் வெளியிட்டுள்ளார்கள். அவ்வாறு V.O.C. என்ற பெயர் பொறித்த முத்திரை ஒன்று இவ்வகழ்வைப்பகத்தில் உள்ளது. இம்முத்திரையின் நீளம் 11 செ.மீ., அகலம் 3 செ.மீ. காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டாகும்.

## போர் ஆயுதங்கள்

பல வகையான போர் ஆயுதங்கள் அகழ்வைப்பகத்தில் காட்சி பொருளாக வைக்கப்பட்டுள்ளன. அவை வாள்கள், பெரிய ஈட்டி, கண்டரா ஈட்டி, கட்டாரி ஈட்டி, பிச்சுவாக் கத்தி மற்றும் யாளிமுக கைத்தடி ஆகியனவாகும்.

## பீங்கானாலான கலைப்பொருட்கள்

அரண்மனையிலுள்ள மணிக்கோபுரத்தின் கீழே இருந்த மண் குவியல்கள் இந்திய தொல்லியல் துறையினரால் தஞ்சையில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டின் போது (1986) சீர்செய்யும் பணியின் போது கிடைத்த பீங்கானாலான கலைப்பொருட்கள், விலங்கு உருவங்களான மயில், வாத்து, புலி, சிங்கம் போன்றவையும் மற்றும் சில கலைப்பொருட்களும் அகழ்வைப்பகத்திற்கு

ஒப்படைத்தனர். அவை தனி காட்சிப் பேழையில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 18,19-ஆம் நூற்றாண்டாகும்.

## மண்ணாலான கலைப்பொருட்கள்

மேற்படி மணிக்கோபுரத்தில் கிடைத்த மண்ணாலான கலைப்பொருட்களும் தனி காட்சி பேழையில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

## சுதையாலான கலைப்பொருட்கள்

மணிக்கோபுரத்தின் கீழ் பகுதியில் கோயில் ஒன்று இருந்தது. அதில் சுதையாலான நாயக்கர் கால மன்னர் மற்றும் அவரின் துணைவியாராக இருக்கலாம் எனக் கருதக்கூடிய உருவங்களின் தலைப்பகுதி கிடைத்துள்ளது. இச்சுதையாலான தலைப்பகுதி தற்போது மராட்டியர் அகழ்வைப்பகத்தில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது.

## நிழற்பட ஓவியங்கள்

சரபோஜி - II, சிவாஜி - II ஆகிய இரண்டு நிழற்பட ஓவியங்கள் தஞ்சை கலைப்பாணியில் வரையப்பட்டு அவ்விரண்டு நிழற்பட ஓவியங்களும் தனி காட்சிப் பேழையில் வைக்கப் பட்டுள்ளது.

☆☆☆☆

# மைல் கற்கள்

கருங்கல்லில் ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு செல்லும் தூரத்தையும், திசையையும் குறிப்பிட்டு மண்ணில் புதைத்து வைக்கும் வழக்கம் சங்க காலம் முதற்கொண்டே நிலவி வருகிறது. தஞ்சையை சுற்றியுள்ள சில ஊர்களிலிருந்து சேகரித்து மராட்டியர் அகழ்வைப்பகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

## திருச்சி - மயிலாடுதுறை மைல் கல்

இம்மைல் கல் தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தில் கல்லணை - பூம்புகார் சாலையில் இருந்து கொண்டுவரப்பட்டதாகும். காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டாகும். இதன் உயரம் 180 செ.மீ. அகலம் 31 செ.மீ. கனம் 15 செ.மீ.

50

TRICHNO POLY

ரு

திருசசிபை பளளி

23

TANJORE

உரு

தஞசாவூா

22

MYAVERAM

உஉ

மாயவறம

AD

1845

## கும்பகோணம் - மயிலாடுதுறை மைல் கல்

இம்மைல் கல் கும்பகோணம் செட்டிமண்டபத்திலிருந்து கொண்டுவரப்பட்டதாகும். உயரம் 172 செ.மீ. அகலம் 40 செ.மீ. கனம் 15 செ.மீ. காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டாகும்.

20
MYAVERAM
உ
மாயவரம
2
COMBACONAM
உ
குமபகோணம

## தஞ்சாவூர் - கும்பகோணம் மைல் கல்

இம்மைல் கல், வயலூர் - ராமாபுரம் சாலை அருகே கிடைத்து கொண்டுவரப்பட்டதாகும். இதன் உயரம் 142 செ.மீ. அகலம் 38 செ.மீ. கனம் 18 செ.மீ. காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு.

18
COMBACONAM
அ
குமபகோணம
5
TANJORE
ரு
தஞசாவூா

## ஆதனக்கோட்டை - தஞ்சாவூர் மைல் கல்

இம்மைல் கற்கள் தஞ்சாவூர் மாவட்டம்; திருக்கானூர் பட்டியில் இருந்து எடுத்துவரப்பட்டதாகும்.

14
அதனக கொடடை
சு
ATHANACOTAY
8
தஞசாவூாற
அ
TANJORE

## கும்பகோணம் - திருவையாறு மைல் கல்

இம்மைல் கல் தஞ்சாவூர் மாவட்டம், திருப்பழனத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும். இதன் உயரம் 124 செ.மீ. அகலம் 42 செ.மீ. கனம் 25 செ.மீ. காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டாகும்.

18

COMBACONAM

அ

குமபகோணம

2

TRIVIAR

உ

திருவயார

## தஞ்சை - திருச்சி - கும்பகோணம்-புதுக்கோட்டை - நாகை மைல் கல்

தஞ்சையிலுள்ள சேமப்படைக் காவலர் குடியிருப்புக்கு அருகில், சாலையோரத்தில் கிடந்த மைல் கல். தற்போது அகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 215 செ.மீ. அகலம் 53 செ.மீ. கனம் 17 செ.மீ.

TANJORE FORT

1

தஞ்சாவூர் கோட்டை

க

TRICHINO POLY

33

திருச்சிபை பள்ளி

௩௩

COMBACONAM

24

கும்பகோணம்

உச

POODOOCOTAH

36

புதுக்கோட்டை

௩௬

NEGAPATAM

52

நாகைப்பட்டினம்

௫௨

**தஞ்சாவூர் - கும்பகோணம் மைல் கல்**

கருந்திட்டைக்குடி கிருஷ்ணன் கோயிலருகில் தெருவில் நிறுத்தப்பட்டிருந்த மைல் கல் தற்போது அகழ்வைப்பகத்திலுள்ளது. இதன் உயரம் 164 செ.மீ. அகலம் 37 செ.மீ. கனம் 20 செ.மீ.

தஞசாவூா

௧

TANJORE

1

குமபகோணம

௨௨

COMBACONAM

22

மற்றும் பல கற்சிலைகள் மராட்டியர் தர்பார் கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

★ ★ ★ ★

# செப்புத் திருமேனிகள்

## விநாயகர்

மராட்டியர் கால கலைப்பாணியுடன் கூடிய மிகச் சிறிய அளவிலான விநாயகர் செப்புத் திருமேனிகள் இரண்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## இலட்சுமி நரசிம்மன்

நரசிம்மர் பத்ம பீடத்தின் மீது அமர்ந்து வலது காலை கீழே தொங்கவிட்டு இடது கீழ் கரத்தால் இலட்சுமியை அணைத்த நிலையில் இலட்சுமி நரசிம்மன் சிலை காணப்படுகிறது. இலட்சுமியின் இடது கரத்தில் தாமரை மலர் உள்ளது. பீடத்தின் முன்பகுதியில் இரண்டு கரங்களையும் குவித்து வணங்கிய நிலையில் அடியார் உருவம் ஒன்று வணங்கியபடி உள்ளது. இதன் உயரம் 16 செ.மீ. அகலம் 10 செ.மீ கொண்டுள்ளது. ஐந்து தலை நாகம் தலைக்கு மேல் காட்டப்பட்டுள்ளது.

## கிருஷ்ணன்

மிகச் சிறிய கலை அழகுடன் கூடிய தவழும் கிருஷ்ணன் திருமேனிகள் மூன்று, காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. கையில் வெண்ணெய் ஏந்தி வலது காலை சற்றே தூக்கி இடது காலை ஊன்றி நடனமாடும் நிலையில் நர்த்தன கிருஷ்ணன் ஒன்றும் உள்ளது.

## விஷ்ணு

பத்ம பீடத்தின் மீது நின்ற நிலையில், நான்கு கரங்களுடன், மேல் இரு கரங்களில் சங்கு, சக்கரம் ஏந்தி வலது புறம் ஸ்ரீதேவியும் இடதுபுறம் பூதேவியும் காணப்படுகின்றன. திருவாட்சி, பீடத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 18 செ.மீ அகலம் 14.5 செ.மீ.

## அனுமன்

வணங்கிய நிலையில் இரு கரங்களுடன் (அஞ்சலி முத்திரை) காதுகளில் மகர குண்டலத்துடன், வால் பகுதி

மேல்நோக்கி காட்டப்பட்டுள்ளது. திருமேனியின் உயரம் 26 செ.மீ. அகலம் 10 செ.மீ கொண்டுள்ளது. பத்ம பீடத்தில் நின்ற நிலை, பின்புறம் சுவாலை காட்டப்பட்டுள்ளது. மலர்மாலைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

## அம்மன்

சதுர வடிவ பீடத்தின் மீது நின்ற நிலையில் வலது கரத்தில் மலர் ஏந்தி இடது கரம் கீழ் நோக்கியும், தலையில் கரண்ட மகுடமும், மார்பில் கச்சையின்றியும், இடுப்பிலிருந்து பாதம் வரை ஆடையுடன் காணப்படுகிறது. இதன் உயரம் 16 செ.மீ. அகலம் 4 செ.மீ. கொண்டுள்ளது.

## கருடன்

இடது காலை மடக்கி முன் வைத்து வலது காலை பின் நோக்கி மடங்கிய நிலையில் இரு கரங்களுடன் தோளின் இரு புறமும் சிறகுகள் விரிந்த நிலையில் காணப்படுகின்றன. உயரம் 9.5 செ.மீ. அகலம் 11.5 செ.மீ. உள்ளன. மற்றும் பல்லக்கு (குழந்தைகள் விளையாட), திருவாட்சி, பாவை விளக்கு ஆகியனவும் காட்சிப் பேழையில் வைக்கப்பட்டுள்ளன.

## மனித உருவங்கள்

சரபோஜி மன்னரின் அமர்ந்த, நின்ற நிலைகளில் செப்பு பிரதிமங்கள் உள்ளது. குதிரை மீது அமர்ந்த போர் வீரன் உருவம் ஒன்று, பெண் உருவம் ஒன்று, கைக்குழந்தையுடன் பெண் உருவம் ஒன்று, மேலும் மராட்டிய மன்னரின் குலதெய்வமான விட்டோபா உருவம் ஒன்று, கொடிப்பெண் உருவம் ஒன்று என அனைத்தும் காட்சியில் உள்ளது. பத்து அவதாரங்கள் மிக நுணுக்கமாகச் செதுக்கப்பட்ட தசாவதார செம்பு மற்றும் கங்கா, யமுனா செம்பு. கெண்டி, வட்டில், குடுவை போன்ற வீட்டு உபயோகப் பொருட்களும் காட்சியில் வைக்கப்பட்டுள்ளது.

## சரபோஜி மன்னர்

நேர்த்தியாக வடிக்கப்பட்ட மராட்டிய மன்னன். நின்ற நிலையில் ஒரு கையை உயர்த்தி மற்றொரு கை செய்கை காட்டிய நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. அழகிய வேலைப்பாடு கொண்ட தலைப்பாகையும், கழுத்திலும், நெஞ்சிலும் புரளும்

ஆபரணங்களும், பஞ்ச கச்சமும் அதன் மேல் ஒரு விரிந்த ஆடையும், இடுப்பில் இறுக்கிக் கட்டிய துண்டும், அந்தத் துண்டின் இரண்டு முனையும் முன்பக்கம் தொங்குகின்றது. காலில் முன்னோக்கி வளைந்த காலணிகளும், அதிக வேலைப்பாடுகள் ஒவ்வொன்றிலும் காணமுடிகின்றது.

## அமர்ந்த நிலையில் மன்னர் திருவுருவம்

காலை மடக்கி நன்கு அமர்ந்து .கொண்டு ஒரு கையை ஒரு தொடையின் மீதும், இன்னொரு கையில் செண்டும், கழுத்தில் நீண்ட ஆபரணங்களும், மேலாடைகளும் கை முழுவதும் மறைத்த நிலையில், கழுத்து வரை மூடிய ஆடை, இவ்வாடை அழகிய வேலைப்பாட்டுடன் அமைந்துள்ளதும், அதில் கோடுகளும் கலைநயத்தோடு தன் ஆடைகளை அமைத்துக்கொண்ட இவை அனைத்தும் இவர்களது கலை உணர்வையே வெளிப் படுத்துகின்றன. ஒரு கையின் தோள்பட்டையில் கிளி அமர்ந்த நிலையில் இருப்பதும் அவர்கள் இயற்கையான மனநிலையை இவை வெளிப்படுத்துகின்றன. தலைப்பாகையின் அழகும், முறுக்கிவிடப்பட்ட மீசையும் இவர் மராட்டிய மன்னர் சரபோஜி எனத் தெரிவிக்கின்றது.

## போர் வீரன்

நின்ற நிலையில் ஆவேசத்துடன் ஒரு கையில் கேடயமும், ஒரு கையில் குறுவாளும், கழுத்து முதல் தொடைவரை அலங்கரித்த கோடுகளிட்ட மேலாடையும், பாதம் வரை அணிந்த ஆடையும் போர் வீரனின் வட்டமான தலைப்பாகையும் மிகவும் அழகுடன் திகழும் மராட்டிய வீரனை கண்முன் நிறுத்துகின்றது.

★★★★

# கற்சிற்பங்கள்

மராட்டியர் அகழ்வைப்பகத்தின் ஒரு பகுதி தர்பார் மண்டபத்தின் வெளிப்புறம் அமைந்துள்ள தூண்கள் நிறைந்த மண்டபம் இருபுறமும் திறந்த நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. நாயக்க மன்னர்கள் கட்டிய கட்டிடப் பகுதிகளை மராட்டிய மன்னர்கள் தங்கள் வசம் கொண்டபோது அவற்றை தங்களது கலைப் பாணிக்கு ஏற்ப இதனை மாற்றி அமைத்துள்ளனர். இதேபோன்று சரஸ்வதி மகால் கலைக்கூடத்தில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டு, அவை காண்போரை வியக்கச் செய்யும் வகையில் தங்களது ஓவியத் திறமையை மண்டபத்திலும், விதானத்திலும் காட்டியுள்ளனர்.

மராட்டியர் கால அகழ்வைப்பகம் என்றாலும் பல பகுதியில் இருந்து பார்வையிட வரும் பார்வையாளர்களின் கண்களுக்கு விருந்தாக தஞ்சையிலும், தஞ்சையைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் காணப்பட்ட கலைநயமிக்க கற்சிற்பங்களை, சோழர், விசயநகரர், மராட்டியர் என அனைத்துப் பேரரசர்களும் போற்றிப் பாதுகாத்த சிற்பக் கலையை விளக்கும்வண்ணம் இம்மண்டபத்தில் தூண்களுக்கு அருகில் இச்சிற்பங்கள் காட்சியாக வைக்கப் பட்டுள்ளது.

மராட்டியர் தர்பார் மண்டபத்தில் நுழையுமுன் அங்கே காட்சி தருவது மிகவும் உயரமான பெரியதோர் நந்தி. அடுத்து இம்மண்டபத்தின் அருகே அமைந்த தூண்கள் நிறைந்த மண்டபத்தில் சைவ, வைஷ்ணவ சமயத்தைச் சார்ந்த சிற்பங்களும், பௌத்த சிற்பங்களும், கல்வெட்டுகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. விநாயகர், திருமால், அம்மன், அடியவர் சிற்பங்கள், தட்சிணாமூர்த்தி, சுப்பிரமணியர், பிரம்மா, அர்த்தநாரீஸ்வரர், பைரவர். சூரியன் போன்ற சிற்பங்களும் இவற்றுடன் ஜேஷ்டா தேவி, சப்தமாதர்கள் சிற்பங்களும், பிரம்மி, பைரவி போன்ற தனிச்சிற்பங்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூரைச் சுற்றி அமைந்துள்ள ஊர்களுக்கு உள்ள தொலைவுகள் தொடர்பாக அறிவிக்கும்

மைல்கற்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை தமிழ் எண்கள் இடப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். இவை விரிவாக முன்பகுதியில் வழங்கப்பட்டுள்ளது.

சோழர்கள் சங்க காலம் தொடங்கி பௌத்த மதத்திலும் அவர்களது கோட்பாட்டிலும் அதிக ஈடுபாடு கொண்டவர்கள். மேலும் சங்க காலத்திலே பௌத்த துறவிகள் இப்பகுதிக்கு வந்து பௌத்த விகாரங்களைக் அமைத்து வாழ்ந்துள்ளனர். அதற்கு சான்றாக அமைவது பல்லவனீச்சுவரத்தில் காணப்படும் பௌத்த விகாரமும் அங்கு அகழ்ந்து எடுக்கப்பட்டபோது கிடைத்த தொல் பொருட்களுமே இதனை எடுத்துரைக்கின்றன.

இதேபோன்று பிற்கால சோழர்கள் காலத்திலும் இராசராசன் முதல் குலோத்துங்க சோழன் வரை சோழர்கள் பௌத்தப் பள்ளிகளுக்கு பேருதவிகளை செய்து வந்துள்ளமை கல்வெட்டுகள் மூலம் அறியலாம். அதற்கேற்ப தஞ்சை மாவட்டத்தில் ஆங்காங்கே காணப்படும் புத்தர் சிற்பங்களும் இதனை உறுதி செய்கின்றன. அத்தகு சிறப்புமிக்க பௌத்த சிற்பங்கள் கி.பி. 9 முதல் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு வரை சேகரிக்கப்பட்டவை. நின்ற நிலையிலும், தியான நிலையிலும் உள்ளவற்றை சேகரித்து இங்கு மராட்டியர் அகழ்வைப்பகத்தில் தூண்கள் நிறைந்த மண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

கல்லால் ஆன ஜன்னல், அழகிய வேலைப்பாடுடன் காணப்படுவது இவர்களது சிற்பக்கலைப் பாணியை விளக்கும் வண்ணமாக காட்சிக்கு பொருத்தப்பட்டுள்ளது.

### நவகண்டம்

நினைத்த காரியம் நிறைவேறும்பொழுது தன் தலையை தானே கொய்து தன்னுயிரை சமர்ப்பிப்பது நவகண்டம் ஆகும். இதுபோன்ற சிற்பங்கள் பல சோழ நாட்டின் பகுதிகளிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற நவகண்டம் சிற்பங்கள் தருமபுரி மாவட்டத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன. இவ்வாறு மக்கள் இறைவனை வேண்டிக்கொண்டு நாட்டு நலனுக்காகத் தன்னுயிரை மாய்த்த வீரர்கள் பலர். இவர்களைப் பற்றிய செய்திகள்

கல்வெட்டுகளிலும் காணமுடிகின்றது. இத்தகு மாவீரர்களுக்கும் சிற்பம் எடுத்து அவர்களைப் போற்றினர். இச்சிற்பத்தையே நவகண்டம் எனவும் அழைத்துள்ளனர்.

## கல்வங்கம்

மூலிகை மருந்து அரைக்கப் பயன்படும் கருங்கல்லாலான அம்மி மற்றும் குழவிகள் உள்ளன.

## பீரங்கி குண்டுகள்

இரும்பு மற்றும் கல்லாலான பல்வேறு அளவுகளில் பீரங்கி குண்டுகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

எனவே ஓர் அகழ்வைப்பகத்தைக் காணும்பொழுது அதன் வரலாற்றுப் பின்னணியையும், முன்னர் இப்பகுதி பெற்ற வரலாற்றையும் அறிந்து கொள்ளுதல் அவசியம் என்ற கருத்தின் அடிப்படையில் இச்சிற்பங்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. சோழர், விசயநகரர், தஞ்சை நாயக்கர், தஞ்சை மராட்டியர் காலத்திய சிற்பங்கள் அவர்தம் சிற்பக்கலையைப் போற்றும் முகத்தான் அமைந்துள்ளது. கல்வெட்டுகள் பொறித்த கற்பலகைகளும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கவை ஆகும்.

★★★★

# முடிவுரை

தமிழக வரலாற்றில் இறுதியாக ஆட்சி நடத்திய சிறப்பை பெற்றவர்கள் மராட்டியர்கள். இவர்கள் தஞ்சைப் பகுதியில் ஆட்சி புரிந்தமையால் தஞ்சை மராட்டியர்கள் என்றே அழைக்கப்பட்டனர். வரலாற்றில் சங்க காலம் தொட்டு தொடர்ச்சியாக சேர, சோழ, பாண்டிய, பல்லவ, விசயநகர, நாயக்க மன்னர்கள் வாழ்ந்ததோடு மட்டுமின்றி நாயக்க மன்னர்களை அடுத்து மராட்டிய மன்னர்களும் மிகவும் சிறப்புடன் வாழ்ந்துள்ளனர்.

ஆட்சிமுறை, போர்கள் போன்ற இவற்றோடு கலை, இலக்கியம், கட்டிடக்கலை, ஓவியக்கலை என ஒவ்வொன்றிலும் தனித்தனி திறமையை செலுத்தி மராட்டியர் கலைப்பாணி என்று அழைக்கும் வண்ணம் திறம்பட அமைத்தது மிகவும் சிறப்புக்குரியது ஆகும்.

இவர்கள் பயன்படுத்திய மொழி, அன்றாடம் தன் வாழ்நாளில் பயன்படுத்திய அளவைகள், எடைக்கற்கள், கடிகாரம், தராசு, பல்லக்கு, உருவச்சிலைகள், இறைவனின் சிறிய செப்புத் திருமேனிகள் என பல்வேறு சிறப்புமிக்க கலைப் பொருட்களையும் தயாரித்து பெருமை சேர்த்தவர்கள். இவர்கள் வழங்கிய செப்புப் பட்டயங்கள், பயன்படுத்திய பீங்கான் உருவ பொம்மைகள், சுதை உருவங்கள் போன்ற பல சிறப்பு மிக்க கலைப்பொருட்கள் அனைத்தும் இங்கு விளக்கமாக பார்வையாளர்கள் தெளிவு பெறும் வண்ணம் எடுத்து இயம்பப்பட்டுள்ளது. எனவே இத்தொல் பொருட்கள் ஓவியங்கள், கட்டிடக்கலை இவை அனைத்தும் பயனுள்ளதாய் அமைய வேண்டும் என்பதே இந்நூலின் நோக்கமாகும். அவ்வாறு இதனைப் படித்து தெளிவுபெற்றால் அதுவே இந்நூலுக்கு வெற்றியாகும்.

இவ்வகழ்வைப்பகத்தை நமது துறைத் தலைவர் முனைவர் தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப., அவர்கள் வருகை புரிந்து சிறப்பான முறையில் காட்சிப்படுத்தப்பட்டதைப் பாராட்டிச் சென்றார்கள். மேலும் தங்களது கருத்துக்களையும் பதிவு செய்துள்ளார்கள்.


அடுத்து பள்ளிக் கல்வித்துறை மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள் வருகை புரிந்து அனைத்து தொல் பொருட்களையும் பார்வையிட்டு தங்களது கருத்துக்களையும் பதிவு செய்துள்ளார்கள்.

பார்வையாளர்களும், ஆய்வாளர்களும், வரலாற்று ஆர்வலர்களும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களும் நேரில் பார்வையிட்டு பயன்பெற்றால் அதுவே இந்நூலுக்கு சிறப்பாகும்.

★★★★




செப்புத் திருமேனி இரண்டாம் சரபோஜி




மராட்டிய போர் வீரன்




தூபக் கலசம்




மராட்டிய தர்பார் மண்டபம் (ஒரு பகுதி மட்டும்)




அரண்மனையின் ஒரு பகுதி (புதுப்பிக்கப்பட்டது)




மணிமண்டபம், தஞ்சாவூர்



நாயக்கர் மண்டபம், தஞ்சாவூர்




கலைக்கூடம், மண்டபம்




சார்ஜாமாடி, தஞ்சாவூர்



பள்ளி கல்வித்துறை அமைச்சர்
மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்கள் 18.7.2009 அன்று
தஞ்சாவூர் மராட்டியர் அகழ்வைப்பகத்தை
பார்வையிடும் காட்சி



மராட்டியர் கால செப்புப்படிம பல்லக்கும் அதில் அமர்ந்துள்ளவர்களையும்
ஆணையர் அவர்கள் கண்டுகளிக்கும் காட்சி



பள்ளி கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்கள் மராட்டியர் அகழ்வைப்பகத்தை பார்வையிட்டு பாராட்டினை பதிவு செய்த மடல்